பாலர் கல்வி

தொகுதி 6	1941 ௵ ஜூன் ௴ விஷு ௵ ஆனி ௴	பகுதி 3

வாழ்க்கை சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட பாடதிட்டம் VI

பருவகாலங்கள் (தொடர்ச்சி)

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை

11. மழைகாலம்

1. சம்பாஷணை :—மழைக்காலத்தில் வாழ்க்கையின் விசேஷங்கள். வியவசாயம் : தண்ணீர் பாய்ச்சுதல்—பலவழிகள்—தண்ணீர் தேங்கவைத்துக்கொள்ளுதல்—பாய்ச்சல் வடிகால் ஏற்பாடுகள். மழைகாலம் உடுப்பு—வெளியே செல்ல குடை—சூடான ஆகாரம் ஏற்றது—பகல்நேரம் குறைவு, இராக்காலம் அதிகம்—விளையாட்டிற்கு நேரம், வசதிகள் குறைவு.

2. மழைக்குமுன் - இயற்கையின் தோற்றம் :—குளிர்ந்த காற்று, மப்பு, கருமேகம், மின்னலும் இடியும், தூரல்—மழைபெய்யும் பொழுது. வீட்டு ஒழுக்கு, தெரு ஜல ஓட்டம், கால்வாய்கள், பிள்ளைகள் கடுதாசுக் கப்பல் மிதக்க விடுதல், மழை நின்றபிறகு தேங்கிக்கிடக்கும் ஜலத்தை அப்புறப்படுத்த ஏற்பாடுகள், சாக்கடை வெட்டி விடுதல், சிறு சிறு கால்வாய்கள் வெட்டுதல், குளம் ஆற்றங்கரைக்கு உல்லாசப் பிரயாணம்-வெள்ளம்

3. மழையின் உபயோகம் :—குளம் குட்டைகளில் நிரம்ப ஜலம்—செடிகள், வியவசாயிகளுக்கு அதி அவசியம்—மனிதர், பிராணிகளுக்கும் குடிக்க குளிக்க இன்றியமையாதது.

மழை உண்டாகும் விபரம்—ஜலத்திலிருந்து ஜலம் (முந்தின மாத சஞ்சிகை கவனிக்க).

பாலம், அணைக்கட்டு, அணை இவற்றின் அவசியம். ஏரிகள், அணைக்கட்டு மூலமாக ஜலத்தை வீணாக்காமல் சேகரித்துக் கொள்ளுதல்.

மேட்டூர் அணையின் விசேஷம்—அணைக்கட்டு ஒன்று செய்தல்—பாலம் கட்டுதல்.

4. A பலவித குடைகள் :—செய்கைவேலை

1. சாக்கினால் செய்த குடை
2. தென்னங்கீத்தினால் செய்த குடை
3. தாழங் குடை
4. துணிக்குடை
5. மலையாளம் தொப்பிக்குடை (தாழை)
6. பர்மா குடை (மூங்கில்)
7. கோயில் குடை
8. சீமாட்டிகள் குடை

a. துணி, காகிதம், குச்சி, கம்பி இவைகொண்டு குடைகள் செய்தல், b. காய்ந்த தென்னம்பாளை, காகிதம், மரக்கட்டைகள் கொண்டு கப்பல் கட்டுமரம், வீடுபோல் அமைந்த கப்பல் செய்தல்.

4. B மழைகாலம் பகல் இரவு நேரங்கள்

மழைகாலத்தில் பகல் நேரம் குறைந்தும் இராக்காலம் அதிகமாகி வருகிறதை தினசரிப்பத்திரிகை, பஞ்சாங்கம் மூலம் அறிவிக்கவும்,

	முதல் தேதி				15-ம் தேதி			
	உதயம்		அஸ்தமனம்		உதயம்		அஸ்தமனம்	
	காலை ம.	நி.	மாலை ம.	நி.	காலை ம.	நி.	மாலை ம.	நி.
செப்டம்பர்	5	58	6	20	5	58	6	11
அக்டோபர்	5	59	5	57	5	59	5	50
நவம்பர்	6	2	5	43	6	7	5	40
டிசம்பர்	6	15	5	40	6	23	5	45
ஜனவரி	6	31	5	54	6	35	6	2
பிப்ரவரி	6	36	6	10	6	32	6	14

தமிழ் மாதங்கள் — அகஸ் (பகல் பொழுது)

தமிழ் மாதங்கள்	முதல் தேதி		15-ம் தேதி	
	நாழிகை	விநாடி	நாழிகை	விநாடி
புரட்டாசி	30	2	29	48
ஐப்பசி	29	32	29	18
கார்த்திகை	29	2	28	48
மார்கழி	28	33	28	29
தை	28	45	28	59

4. C குடைப்பாட்டு

பகலோன்தெறும் கிர
ணம்
பாய்பறவை யெச்சம்

மிகமேலுறு தகற்றும் ;
விண்ணின்—முகிலத
னால்

பெய்யும் மழையைத் த
டுக்கும் ;
பேரழகுமாம் ஒருவர்

கையில் குடையிருந்தக்
கால்.

5. மழை அளவு

A மழை அளக்கும் கருவி: இதன் உபயோகத்தை அறிவிக்கவும். சமீபத்தில் தாலுகா கச்சேரி, போலீஸ் ஸ்டேஷன், சப்ரிஜிஸ்தர் ஆபீஸ் முதலியவைகளில் மழையளக்கும் கருவியிருக்குமானால் அங்குசென்று இதை அறிமுகப்படுத்தவும்.

B நீளம் 4 அங்குலம், அகலம் 4 அங்குலம், உயரம் 8 அங்குலம் உள்ள ஒரு தகரப்பாத்திரத்தில் மழை ஜலத்தைச் சேர்க்கலாம். சற்று உயரமான இடத்தில் மழை நடுவில் இதை அசையாமலிருக்கும்படி வைக்கவும். ஒரு அடிக்கோல்கொண்டு அதனுள் சேர்ந்த ஜலத்தை அளக்க முழுஅங்குலம் எவ்வளவு என்று தெரியும்.

1 அங்குலம் நீளம், 1 அங்குலம் அகலம் 16 அங்குலம் உயரம் உள்ள ஒரு நீண்ட தகரப்பாத்திரம் ஒன்று செய்துகொள்ளவும். இதனால் ஒருதடவை அளக்க 1 அங்குலம் மழை ஆகும். 16 அங்குலம் உயரம் இருப்பதனால் இதில் ஒவ்வொரு அங்குலம் உயரம் நிற்கும் மழை ஜலம் $\frac{1}{16}$ அங்குலம் மழையைக் காட்டும்—4 பாகம் $\frac{1}{4}$ அங்குலம், 8 பாகம் $\frac{1}{2}$ அங்குலம் 12 பாகம் $\frac{3}{4}$ அங்குலம மழையை முறையே அறிவிக்கும்.

சென்னை இராஜதானி பல பாகங்களில் 1939-ம் வருஷம் பெய்த மழை அளவு.

		அங்குலம்
1.	விசாகப்பட்டினம்	.... 32·8
2.	கீழ் கோதாவரி	.... 60·4
3.	மேல் கோதாவரி	.... 41·9
4.	கிருஷ்ணா	.... 38·5
5.	குண்டூர்	.... 42·2
6.	நெல்லூர்	.... 37·7
7.	பெல்லாரி	.... 18·5
8.	கடப்பை	.... 26·6
9.	கர்னூல்	.... 19·6
10.	அனந்தப்பூர்	.... 24·9
11.	செங்கற்பட்டு	... 42 3
12.	சென்னை	.... 33·6
13.	சித்தூர்	.... 44·8
14.	வட ஆற்காடு	.... 40·4
15.	தென் ஆற்காடு	.... 67·2
16.	தஞ்சாவூர்	... 46·3
17.	திருச்சி	.... 52·1
18.	மதுரை	... 36·2
19.	ராமனாதபுரம்	.... 45·3
20.	திருநெல்வேலி	.... 19·4
21.	மலையாளம்	.... 115·3
22.	தென் கன்னடம்	.... 116·4
23.	கோயம்புத்தூர்	.... 24·0
24.	நீலகிரி	.... 60·5
25.	சேலம்	.... 49·0
26.	புதுக்கோட்டை	.... 55·4
27.	திருவாங்கூர்	.... 72·5
28.	குடகு	.... 104·5
29.	கொச்சி	.... 145·2

[தலை நகரங்களில் பெய்த மழை அளவு தான்]

1939-ம் வருஷம் மாதவாரி மழை அளவு

நெ.	ஊர்	ஜனவரி	பிப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜுன்	ஜுலை	ஆகஸ்டு	செப்டம்பர்	அக்டோபர்	நவம்பர்	டிசம்பர்	மொத்தம்
1.	குண்டூர்	....	....	·6	·2	·6	1·9	6·0	3·1	10·0	18·2	1·5	....	42·1
2.	நெல்லூர்	1·0	....	....	3·0	....	·3	2·6	1·0	1·7	15·1	12·7	0·4	37·8
3.	மதராஸ்	·7	....	·3	5·2	....	1·1	1·4	0·9	5·2	5·1	13·0	0·9	33·8
4.	சைதாப்பேட்டை	1·1	....	2·0	5·7	....	·6	1·0	1·4	6·7	5·8	15·8	0·6	40·7
5.	கூடலூர்	3·5	....	·3	9·9	2·3	·2	·7	3·9	8·4	16·4	21·0	0·7	67·3
6.	சீர்காழி	2·1	...	·4	11·8	1·8	·2	·1	2·5	2·7	5·3	24·9	1·7	53·5
7.	தஞ்சாவூர்	2·2	...	....	9·0	1·5	1·1	·3	5·6	2·2	8·8	15·6	·1	46·4
8.	செங்கற்பட்டு	0·9	....	4·0	7·5	....	·7	·6	1·0	6·2	7·8	12·3	1·3	42·3
9.	கடப்பை	0·2	....	·3	1·2	·1	2·4	2·0	2·0	10·1	4·6	3·8	·1	26·8
10.	மதுரை	0·9	·4	1·3	7·1	2·5	2·6	....	3·2	6·1	6·6	5·4	·1	36·2
11.	திருச்சி	1·9	....	....	5·6	3·3	3·7	·2	3·6	1·6	13·3	18·0	1·0	52·2
12.	நீலகிரி	1·0	·3	·7	3·0	3·5	6·0	6·0	7·8	4·4	11·2	16·6	....	60·5
13.	பாலக்காடு	·1	....	·2	7·8	3·2	9·7	25·0	10·2	2·9	9·1	8·9	·8	77·9
14.	கண்ணனூர்	·3	·3	....	4·4	·2	31·0	38·9	11·3	28·5	6·9	10·0	....	131·8
15.	தலைச்சேரி	·3	·2	....	5·0	·8	30·1	39·1	13·0	2·7	11·2	3·7	....	106·1
16.	படகாரா	·4	·3	....	4·0	2·8	33·3	41·2	10·8	2·0	10·0	6·2	....	111·0
17.	மங்களூர்	·1	·1	·1	5·0	....	37·2	37·1	19·5	5·4	8·0	3·9	....	116·4



மழை அளவைக் காட்டும் படம்—ஷை அளவைப்படி.

மாதவாரியான மழை அளவு: கணக்குகள்: இங்குள்ள அட்டவணையை உபயோகிக்கவும்.

1. மாதவாரியாகக் காட்டுதல்—வருஷ மொத்தம்.
2. முதல் ஆறுமாத மழை—பின் ஆறுமாத மழை—எப்பொழுது அதிகம்.
3. ஊர்களுக்குள்ள மழை அளவு வித்தியாசம்.

கேள்விகள்:

(1) கள்ளிக்கோட்டை, தலைச்சேரி, மங்களூர் — எந்தக் கரையில் இருக்கின்றன? எந்த மாதம் மழை அதிகம்?

(2) சென்னை, சைதாப்பேட்டை, கூடலூர், சீர்காழி, நாகப்பட்டினம் — எந்தக் கரையில் இருக்கின்றன? எந்த மாதங்களில் மழை அதிகம்?

ஞாபகம் வை.

ஜூன் ஜூலை மாதங்களில் ஒரு பருவக்காற்றும் அக்டோபர் நவம்பர் மாதங்களில் ஒரு பருவக்காற்றும் அடிக்கிறது.

(3) ஜூன், ஜூலை, அக்டோபர், நவம்பர் இந்த 4 மாதங்களில் எந்த ஊரில் மழை சீராகப் பெய்கிறது ?

(4) மழை குறைந்த ஊர்கள் எவை? அவைகளைப் படத்தி லிருந்து அறி. உன் படத்திலும் குறித்துக்கொள்.

மழைகால இயற்கைத் தோற்றங்கள்.

1. காலசக்கரத்தில் தினசரி காணப்படும் இயற்கைத் தோற்றக் குறிப்புகள் எழுதிக்கொள்ளவும்.

தினசரி மழை அளவையைக் குறிக்கவும்.

2. காய்கறிகள், பழம்: அதிகம் கிடைக்கா ; கிடைக்கிறதைக் குறிக்கவும்.

3. வியவசாய ஏற்பாடுகள், முறைகள், காலாகாலத்தில் காணப் படும் விஷயக்குறிப்புக்கள். வயற்புறம்போய்ப் பார்க்கவும்.

4. ஜீவராசிகள். நத்தை, தவளை, மண்புழு (நாகப்பூச்சி) மரவட்டை.

நத்தை.—கொம்புபோன்றுள்ள உறுப்பின் முனையில் கண்கள். இக்கண்களை உயரத்தில் நீட்டிப்பார்க்க முடியும். சுருக்கிக்கொள்ள முடியும். உணர்ச்சிக் கொம்புகளும் உண்டு. நகர்ந்துசெல்லும் பாதை யில் ஒருவகை எச்சில் : அடிவயிற்றில் ஊறும் எச்சில்—மேலே ஒருகூடு.

தவளை.—தவளையின் ஜன்ம வேறுபாடுகள்: முட்டை—புழு போன்ற குஞ்சு—சிலும்பலும் வாலும் கூடியது—சிலும்பல் மறைந்து போய் தலை, கண், வாய் பின்கால்கள் முளைக்க ஆரம்பம், வால் குறுகு தல்—முன் கால்கள் வால் மறைந்துபோதல்—நீர்நிலம், மரத்தடி இங்கு வாசம்—பின்கால் நீளம், தத்தித் தத்திப்போகும்—நாக்கு உட்புறமாக மடிந்து இருக்கிறது—முனை இருபிளவு—பூச்சிகளைப் பிடிக்கும்விதம்—மழைக்காலத்தில் இராக்கால சத்தம்—தவளையின் நிறம் பச்சை, சாம்பல்—" தவளைக்காய் " இது தவறு: தவளை ஆட்டம்: தவளை ஜலத்தில் தத்தும் விதம்—பிள்ளைகள் அம்மாதிரி கல் எறிதல்—தவளையை அடித்தல் பாபம்—

நாகப்பூச்சி.—உடல் பல வளையங்கள்—பூமியில் வளை தான் இருப் பிடம்—உடலை இழுத்து நீட்டும்—பூமி மண்ணை மேலும் கீழும் புரட்டு கிறது—உழவனின் நண்பன்.

மரவட்டை.—உடல் பல வளையங்கள்—ஜோடி ஜோடியான பல கால்கள்—நீளம், பருமன், நிறத்தில் பலவகைகள். பவழநிறம், சாம்பல் கறுப்புநிறம்—தொட்டால் சுருட்டிக்கொள்ளும்.

7. சுகாதாரம்.

புதுமழை ஜலத்தில் விளையாட்டு, அலைதல் உதவா: சூடான பானம் ஆகாரம் தண்ணீர் தேவையாயிருக்கிறது. சுத்தம் அவசியம். அழுக்கை அகற்றவேண்டும். நன்றாய்ப் பக்குவமான காய்கறி கிழங்குகளைப் புசிக்கவும். அஜீர்ணமே வியாதிக்கு ஆதாரம்—அம்மாதிரி மலச்சிக்கலும்.

8. பாட்டு, பழமொழி, பள்ளு.

சோழநாட்டில் மழைவர்ணனை.

(அவ்லியரசானி மாலை)

(a) சோழனது சீமையிலே சொரிகிறதே பெருமழைகள்
கடலிரைச்சல்போலே குமிறிற்றே மேகங்கள்
குமிறிற்று மேகமெல்லாம் குடங்கொண்டு வார்த்தாப்போல்
இறைகிறதே மேகமெல்லாம் ஏகவெள்ளம் பெருகிறது
சோனை மழைபோலே சொரிகிறதே மேகமெல்லாம்
நல்ல மழை பெய்வதனுல் நாடுஞ் செழித்திடவே
பூமிகுளிர்ந்ததுவே பொய்கைகள் நிரம்பினவே
ஏரிகள் நிரம்பி எதிர்க்கிறதே ஏகவெள்ளம்
கழனிகள் நிரம்பி கால்வாய்கள் தானிரம்பி
தடாகங்கள் தானிரம்பி தாமரைகள் பூத்தனவே
உலர்ந்த மரங்கள் எல்லாம் உயிருண்டாய்த் தளிர்த்தனவே
இலையும் தழைகளெல்லாம் ஏகமாய்த் தளிர்த்தனவே
செந்நெல் விளைந்தனவே தேசஞ் செழித்தனவே
பயிர்கள் விளைந்தனவே பலனைக் கொடுத்தனவே
ஏர்கட்டியுழுவாரும் இளநாற்று நடுவாரும்
பயிரிடுங் குடிகள் பலபட்டுப் போனுர்கள்
ஓடுங் குடிகளெல்லாம் ஊரைவந்து சேர்ந்தார்கள்
சோழராஜன் பட்டணத்தில் சுகப்பட்டு வாழ்ந்தார்கள்.

(b) 1. வானம் சுருங்கின் தானம் சுருங்கும்

2. மாரியல்லது காரியமில்லை

3. வரப்புயர நீர் உயரும்
நீர் உயரப் பயிர் உயரும்
பயிர் உயரக் கதிர் உயரும்
கதிர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயரும்

(c) குறள். துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉ மழை.

தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்காதெனின்

ஆற்று வெள்ளம் நாளைவரத்
தோற்றுதே குறி—மலை
யாழ மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக்
காற்றடிக்குதே—கேணி
நீர்ப்படு சொறித்தவளை
கூப்பிடுகுதே
சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்றடைக்குதே—மழை
தேடி ஒருகோடி வானம்
பாடி ஆடுதே.

[கலைமகள் 1941 மார்ச்]

9. மழைகால பண்டிகைகள் உற்சவாதிகள்

1. *தீபாவளி—தற்சமயம் கொண்டாடும் விதம்—கொண்டாட்ட சம்பந்தமான படங்கள்—எண்ணெய் ஸ்நானம்—புது உடுப்பு பக்ஷணம்—படாஸ்—பண்டிகை.*

   தீபாவளிக்கதை—நரகாஸுரவதம்—நரக சதுர்த்தசி ஸ்நானம்—நரகாசுரனது வேண்டுகோள்.

2 *கந்தசஷ்டி உற்சவம்—சூரசம்ஹாரம்—சுப்பிரமணியரும் சூரபத்மனும்.*

3. *கார்த்திகை தீபம்.*

[பாலர்கல்வி 1941 ஏப்ரல் இதழ் கவனிக்க]

10. **சம்பாஷணை**

வெயிற்காலம் :—(*வெயிற்காலத்திற்கும் மழை குளிர் காலத்திற்கும்) ஒருவர் விசிறி கொண்டு விசிறிக்கொண்டிருக்கிறார்—அங்கவஸ்திரம் இல்லை—பக்கத்தில் குளிர்ந்த பானங்கள் இருக்கின்றன.*

மழைகாலம் :—*கம்பளி போட்டுக்கொண்டு கணப்பு பக்கத்தில் இருவர் இருக்கின்றனர்—ஒரு விளக்கு எரிந்துகொண்டு இருக்கிறது.*

வெயிற்காலம் :—காய்ந்தால் ஒரே காய்ச்சல், பெய்தால் பெரு வெள்ளம். காய்ந்தாலும் பாழ், பெய்தாலும் பாழ் அதிவிருஷ்டி, அனுவிருஷ்டி. வெயில் தாங்கமுடியவில்லையே! சூரியனுக்குக் கொஞ்சங்கூட இரக்கமில்லையே!

உதகமண்டலம் பெங்களூர் கூட உஷ்ணமாயிருக்கிறதாமே! இந்த சூரியனைக்கண்கொண்டு பார்க்கமுடியவில்லையே என்ன உக்கிரம்!

மழைகாலம் :—மழைகொட்டினாலும் ஒருவாரம் இடைவிடா மழைதான் உச்சிவேளையில் ஒரு நிமிஷங்கூட சூரியனைப் பார்க்க முடியாவிட்டால் சன்னியாசி பிழைச்சுபோச்சு. எப்போது சூரியனைப் பார்க்கப் போகிறோம் என்று ஜனங்கள் ஏங்கிப்போகிறார்கள்!

வெயிற்காலம் :—உஷ்ணம் தாங்கமுடியவில்லை விசிறி விசிறி கை வலிஎடுத்து விடுகிறது. தண்ணீர் எவ்வளவு ஜில் என்று குடித்தாலும் நாக்குவறட்சி தணியமாட்டேன் என்கிறது

மழைகாலம் :—எனக்கோ சுடச்சுட சாப்பிட ஆசையாய் இருக்கிறது. உதகமண்டத்தில் கொதிக்கிற சாதமும், தண்ணீரும் ஒரு நொடியில் ஜில்லென்று விடுகிறது தெரியாதா?

இந்த சூரியனுக்கே உஷ்ணம் குறைந்துவிட்டுதாமே! அதனால் தான் மழைகூட குறைந்துவிட்டுதாம்!

வெயிற்காலம் :—வெல்லக்கட்டிக்குத் தித்திப்பு போதாது என்று சொல்லுவதுபோல் இருக்கிறது. சூரியன் கிழஞ்சாய்ந்துபோனாலும் வெயில் கொடுமையைப்பாரும்! கிழவனுக்கே இவ்வளவு கொடுமையென்றால் இளம்பிள்ளைக் கொடுமைக்குக் கேட்பானேன்!

சீக்கிரம் சாயந்தரம் வரக்கூடாதா? இராத்திரியாகவே இருந்துவிட்டால் தேவலை.

மழைகாலம் :—உமக்கு இராத்திரி குறுகல் 11 மணி நேரந்தான். எனக்கோ 13 மணி நேரம். விடியற்காலம் 3 மணிக்கு விழித்துக் கொண்டு பொழுது எப்பொழுது விடியப் போகிறது என்று காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. சூரியன் மெதுவாய் 6-30 க்கு உதிக்கிறான்.

வெயிற்காலம் :—ஆயினும் இராக்காலத்தில் சந்திரன் பிரகாசிக்க என்ன இன்பமாய் இருக்கிறது பாருங்கள்.

மழைகாலம் :—சூரியன் மனிதர்களை வாட்டினால் சந்திரன் ஜலத்தை வாட்டுகிறான். சமுத்திரத்து அலை எழும்பி எழும்பி விழுகிறதே—நிலாவைக்கண்டால் ஜலத்திற்குப் பயித்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது.

மழைகாலம்:—ஒன்று தோன்றுகிறது. பகல் எல்லாம் காய்ந்து இரவெல்லாம் பெய்தால் பகல் வேலைக்கு இடைஞ்சல் இராது. இராக் காலம் சுகமாய்த் தூங்கலாம்.

வெயிற்காலம்:—வந்தீரா வழிக்கு! வேர்வை ஒழுகி ஒழுகி வேலைச்செய்து உடம்பு நனைந்தால் உமக்கு வேடிக்கைபோல் இருக்கிறது.

மழை:—அதுவே ஆரோக்கியம் என்று நினைத்தேன்.

(இரண்டு மத்தியஸ்தர்கள் வருகிறார்கள்)

முதல் மத்தியஸ்தர்:—மனிதன் சூரியன் எரிக்கும்பொழுது சந்திரன் வேண்டும் என்கிறான். பகலாயிருந்தால் இரவு தேவலை என்றும் வெயில் இருந்தால் மழைவேண்டும் என்றும் மழைபெய்தால் சூரியன் எரித்தால்போதும் என்றும் ஏதாவது சொல்லிக்கொண்டேயிருப்பான். உள்ளதைக்கொண்டு திருப்தி வேண்டும். சூரியன் சந்திரன், வெயில் மழை, பகல் இரவு, இவை இரண்டும் கலந்தேவரும்.

இரண்டாம் மத்தியஸ்தர்:—ரொம்ப சிரிக்கிறவன் கண்ணிலும் கண்ணீர்வரும். ரொம்ப அழுகிறவன் கண்ணிலும் கண்ணீர்வரும். சுகம் துக்கம் கலந்தே வரும்.

ரொம்ப சந்தோஷமும், ரொம்ப துக்கமும் உதவாது. எல்லாம் கடவுள் செயல் என்று மனது சமாதானம் அடையவேண்டும்.

இராஜனுக்கும் சுகம் துக்கம் உண்டு. ஜனங்கள் வியாதியினாலும் பஞ்சத்தினாலும், சண்டையினாலும் கஷ்டப்பட்டால் அரசன் மனதுக்கு நிம்மதி ஏது? சஞ்சலந்தான்.

முதல் மத்தியஸ்தர்:—கடுமழையிலும் விடியற்காலம் எழுந்திருந்து குளிர்ஜலத்தில் மூழ்கித் தமது கடவுளை வழிபடும் புண்ணியவான்களைப் பார்ப்போம்! இடையூறுகளைக் கவனியாமல் விடாது தமது காரியத்தில் கண்ணும் கருத்தும் உள்ளவர்களே மேலான காரியத்தைச் செய்ய முடியும்.

இரண்டாம் மத்தியஸ்தர்:—அது சொட்டை, இது சொத்தை என்ற நிந்தனையையும் அதிருப்தியையும் விட்டு பொறுமையுடன் உள்ளதைக்கொண்டு திருப்தி யடைகிறவனே பெரியவன். நல்லதும் பொல்லாதும் கலந்தேதான் இருக்கும். மனிதன் யுக்தியினாலும் புத்தியினாலும் எல்லாவற்றையும் சமாளிக்கவேண்டும்.

வெயிற்காலம் குளிர்காலம்:—ஐயா உங்களுடைய சம்பாஷணை எங்களது மனதுக்கு ஆறுதலையளித்தது. வெயிலும் வேண்டும் மழையும் வேண்டும். நாம் இருவரும் ஒருவரை ஒருவர் விரோதியாமல் சினேகிதர்களாகவே இருப்போம்.

ரிஷி வனத்தில் நடந்த மகாநாடும், ஆரம்ப ஆசிரியர்களும்.

S. ஸ்ரீநிவாஸன்; உயர் பாடசாலை, செங்கம்.

தென் இந்திய ஆசிரியர்களின் வருஷவாரி மகாநாடு இவ் வருஷம் சித்தூர் ஜில்லா ரிஷி வனத்தில் (Rishi Valley) மேமீ 15, 16, 17 தேதிகளில் நடந்தது. அதன் விவரங்களை ஆசிரியர்கள் பத்திரிகைகளில் பார்த்திருக்கலாம். இது தென் இந்திய ஆசிரிய சங்கத்தின் 32-வது மகாநாடு. மேற்படி சங்கம் ஆசிரியர் அனைவருக்கும், பொதுவான ஸ்தாபனம். ஆசிரிய சமூகம் ஒன்று என்பது அதன் கொள்கை. ஆரம்ப பாடசாலை, உயர் பாடசாலை, கல்லூரி ஆகிய கல்வி ஸ்தாபனங்களில் வேலை செய்யும் சகல ஆசிரியர்களும் அதில் அங்கத்தினரா யிருப்பதே இதற்குப் போதிய சான்று. ஆசிரிய சமூகத்திற்குள் பிரிவினை கூடாது. அதாவது ஒவ்வொரு கிரேட் ஆசிரியர்களும், தனித்தனி சங்கங்களை நிருவிக் கொள்வது தொழில் முறையில் விரும்பத்தக்கதல்ல. அவைகள் அந்தந்த ஸ்தலங்களுக்கு மட்டும் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் மாகாணத்தையோ, தேசத்தையோ நோக்கத்திற் கொள்ளும் போது, அப் பிரதேச முழுமைக்கும் ஒரு பொது ஸ்தாபனம் அவசியம். ஸ்தல சங்கங்கள் அதோடு இணைக்கப்பட்டிருக்க வேண்டும். இதையே இலக்காக வைத்துக்கொண்டு, தென் இந்திய ஆசிரியர் சங்கம் நமது தொழில் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிறது.

ஆசிரியர்களின் அடிப்படையான குறைகள் எல்லாவித ஆசிரியர்களுக்கும் பொதுவானவைகளாகவே இருக்கின்றன. சம்பள விகிதம், உத்தியோக நிபந்தனை, சர்க்கார் உதவி, (Grant) அளித்தல், சர்க்கார் மானேஜ்மெண்ட்—ஆசிரியர் உறவு, போதனாமுறை ஆராய்ச்சி, பாட திட்டநிர்மாணம், இவையெல்லாம் ஆசிரியர்களின் தனிப்பட்ட சங்கங்களால் கவனிக்கப்பட வேண்டியவை யென்று யாராவது சொல்ல முடியுமா? இவைகளைப்பற்றிய ஆசிரியர்களின் பல குறைகளும் கடமைகளும் உண்டு. இவைகளைத் தீர்த்துக்கொள்ள ஒருமுகப்பட்ட முயற்சி அவசியம். தனித்தனியாக முயற்சிப்பதில் அர்த்தமுமில்லை, பயனும் ஏற்படாது. கல்வி என்பது ஒரு மொத்தமாகப் பாவிக்கப்படவேண்டும். அதைப் பலரகங்களாகப் பிரித்து, ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாதவைப்போல் பாவிப்பது, கல்வியின் தத்துவத்திற்கே ஒவ்வாதது. அதைப்பேலவே, உபாத்தியாயர்களின் நலன் புலன்களும் ஒன்றுகவே கருதப்பட வேண்டும். தே. இ. ஆ. ச. த்தின் இப் பெரிய நோக்கம் ரிஷி வனம் மகா நாட்டின் நடவடிக்கைகளை நேரில் கவனித்தவர்களுக்கு வெளிப்படையாகும்.

ஆசிரியர்கள் குறைவின்றி நிம்மதியாக வாழாத எந்த நாடும் உருப்பட முடியாது. அதிலும் ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமை சீர் கெட்டிருக்குமாகில், இன்னும் மோசம். இத்தன்மையை மேனுடுகளில் நன்கு அறிந்திருக்கின்றனர். நமது தேசத்தில் அதற்கு இன்னும் மதிப்பு ஏற்படவில்லை. இதை அரசாங்கத்துக்கு அவ்வப்போது வலியுறுத்தி, ஆசிரிய நிலையை பொதுவில் சீர்படுத்த தெ. இ. ஆ. ச. சென்ற 32 வருஷகாலமாக, இயன்றமட்டும் உழைத்து வருகிறது. இவ் வருஷம் ரிஷி வனத்தில் நடந்த மகாநாடு, ஆரம்ப ஆசிரியர்கள் நிலைமையும், ஆரம்பக் கல்வி நிலைமையையும் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது.

ஆரம்பக் கல்வியில் ஈடுபட்ட ஆசிரியர் மிகச் சிலரே மகா நாட்டுக்கு வந்திருந்தனர். மகா நாட்டிற்கு வருவதென்றால் பணச்செலவு. ஆரம்ப ஆசிரியர்களின் பணத்தொல்லை தெரிந்த விஷயம். ஆயினும் ஒரு தாலுக்காவுக்கு ஒருவராவது பொதுச்செலவில், தாலுக்கா யூனியன் பிரதிநிதியாக மகாநாட்டுக்கு அனுப்பப்பட வேண்டும். தெ. இ. ஆ. ச. த்தோடு தங்கள் பிரதேச யூனியன்களை இணைத்துக்கொண்டு, அதன் மூலம் தங்கள் நிலைமையை சீர்படுத்திக் கொள்வதைக் காட்டிலும், அவர்களுக்கு வேறு சிறந்த வழியில்லை. இதை ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியரும் உணரவேண்டும். மேலும் வருஷவாரி மகாநாடுகளுக்குச் சென்று வருவதே ஒரு தனி அனுபவம், ஒரு தனிக்கல்வியுமாகும். இவ் வருஷம், ரிஷி வனத்தில், மாகாணத்தின் பல பாகங்களினின்றும் கூடிய ஆசிரியர்கள், தங்கள் அனுபவங்களை என்றும் மறக்கமாட்டார்கள். இவ் வனத்தின் அழகையும், அங்கு நடக்கும் பள்ளியின் தனிச் சிறப்பையும் அவர்கள் கண்டு களித்தனர்.

ஆரம்பக் கல்வி, ஆரம்ப ஆசிரியர் சம்மந்தமாக, மகாநாடு ஆலோசித்த விஷயங்கள் :— (1) கிராண்டு விதிகளை மாற்றவேண்டிய அவசியம். (2) ஆசிரியர்—மானேஜர் ஒப்பந்தம். (3) ஒரே சீரான சம்பள நிர்ணயம். (4) கிராண்டில் 'வெட்டு' செய்தல். (5) லோகல் போர்டு, முனிசிபல் ஆசிரியர்களின் நிலைமை. (6) ஆரம்ப ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி அளித்தல். (7) பஞ்சாயத்து பாடசாலைகளுக்கு கிராண்ட் கொடுப்பது. (8) லோகல் போர்டு உபாத்தியாயர்களின் சர்வீஸுக்கும் சம்பளத்துக்கும் பொருத்தமில்லாமலிருப்பது. (9) உயர்ந்த கிரேட் ஆசிரியர்களைத் தாழ்ந்த கிரேட் காலிஸ்தானங்களில் நியமித்து குறைந்த சம்பளங் கொடுப்பது. (10) சம்பளம் பட்டுவாடாவில் ஒழுங்கினம். (11) திட்டமான லீவ் விதிகள் இல்லாமலிருப்பது. (12) சிக்கனம் காரணமாகச் சம்பள வெட்டு, வேலை நீக்கம் முதலியன செய்தல், (13) அனுவசியமான உத்திரவுகள், (14) அடிக்கடி மாற்றல். (15) ஆரம்பப் பாடசாலை திட்டம். (16) ஆரம்ப ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவசப் படிப்பு வசதி.

(17) ஆரம்பக்கல்வி ஒரே நிர்வாகத்தின் கீழ் இருப்பதன் அவசியம். (18) பாடசாலைகளுக்கு ஒழுங்கான கட்டிடமும், விளையாட்டு மைதானங்களும். (19) மானேஜர்களின் மனப்பான்மை. (20) ஆரம்ப ஆசிரியர்களின் பிராவிடண்ட் பண்டு.

இத்தனை விஷயங்களும் அடங்கிய ஒரு சிறு புத்தகம் அச்சிடப்பட்டு யாவருக்கும் வழங்கப்பட்டது. அதில் குறிப்பாக கண்டிருந்த மேற்படி விஷயங்களை கல்வித்துறையில் உழைத்து, அனுபவம் பெற்ற பல ஆசிரியர் விஸ்தரித்து பேசினர். அதிகாரிகளின் ஒழுங்கற்ற நடவடிக்கைகளும், பிற்போக்கான மனப்பான்மையும் பற்றி அனுபவத்தின் பேரில் பலர் பேசினார்கள். ஆரம்பக் கல்விசம்மந்தமான சகல பிரச்னைகளும், அவரவர்களின் பிரதேச அனுபவங்களைக்கொண்டு, ஆலோசிக்கப்பட்டன. கல்வித் துறையில், மிக்க கஷ்டப்பட்டு பல தகவல்களை சேகரித்து, அவைகளை யாவருக்கும் விளங்கும்படி தொகுத்து, யாவருக்கும் உபயோகப்படும்படி அச்சிட்டு வழங்கிய பல தெ. இ. ஆ. ச. ஊழியர்களுக்கும் ஆரம்ப ஆசிரியர் கடமைப்பட்டுள்ளனர்.

இப்படி சேகரித்துத் தொகுக்கப்பட்டிருந்த தகவல்கள் மூன்று தலைப்புகளின் கீழ்க்கொடுக்கப்பட்டிருந்தன.

அவை. (1) தாய்மொழியில் கல்விபோதித்தல்
(2) எல்லாருக்கும் கல்வி
(3) ஆசிரியர்களின் தொழில் நிபந்தனைகள்.

இதுவரையில் உயர் பாடசாலைகளில் பாடங்களெல்லாம் ஆங்கிலத்தில் கற்பிக்கப்பட்டுவந்தன. தாய்பாஷையிலே போதிப்பதுதான் இயற்கை, கல்வியும் விரைவில் பரவும், பிள்ளைகளும் எளிதில் கற்பார்கள் எனத்துணிந்து, காங்கிரஸ் மந்திரிகள் காலத்தில் தாய்பாஷையில் கற்பிக்க வேண்டுமென்று உத்திரவு போட்டார்கள். சுமார் நூறுவருஷ காலமாய் ஆங்கிலத்தில் கற்பிக்கப்பட்டுவந்த பாடங்களை திடீரென்று தாய்பாஷையில் கற்பிக்க வேண்டுமென்று ஏற்பட்டதால், சில பள்ளிக்கூடங்களுக்கு சிறிது அசௌகர்யம் ஏற்படத்தான் செய்யும். அதற்காக ஒரு பெரிய கல்வித் தத்துவத்தையே விட்டுக்கொடுத்து விடமுடியாது. சிலர் இந்த அற்ப கஷ்டங்களை பிரமாதப்படுத்தி, பழைய முறைக்குத் திரும்பிப்போகப் பார்க்கின்றனர். இதற்குச் சிறிதும் இடங்கொடுக்கக் கூடாதென்று ரிஷிவனத்தில் கூடிய ஆசிரியர்கள் ஒரேமனதாய் சர்க்காருக்கு எடுத்துக் கூறிவிட்டனர்.

இரண்டாவது, எல்லாருக்கும் கல்வி, ஆரம்பக்கல்வி ஒரு பிரமாதமான, சிக்கலான, ஏராளமான பணச்செலவுள்ள இலாகா. இதுவரை சர்க்கார் செய்ததெல்லாம் அரசிலை நுனியைக்கூடத் தொடவில்லை. நூற்றுக்கு நூறுவீதம் ஜனங்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகவேண்டுமாகில், இதே ரீதியில் பல நூற்றாண்டுகளாகும். ஆகையால்

இதுவரையில் செய்து வந்ததைவிட, இன்னும் அதிக தீவிரமான முயற்சி செய்யவேண்டும். முக்கியமாக ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமையைச் சீர்படுத்தவேண்டும்.

மூன்றுவது உபாத்தியாயர்களின் ஊழிய நிபந்தனைகள். அதைப் பற்றி அதிக விவாதம் நடந்தது. பல மானேஜ்மெண்டுகள் பலவித நிபந்தனையின் கீழ் ஆசிரியர்களை நியமிக்கின்றன. இவைகளை ஒரே ஒழுங்குக் கொண்டுவரவேண்டியது அவசியம். இதை சர்க்கார் தலையிட்டுச் செய்தாலொழிய வேறுவழியில்லை. ஒரே கிரேட் ஆசிரியர்களுக்குப் பலவிதமான சம்பள விகிதங்கள், ஊழிய நிபந்தனைகள் ஏற்பட்டிருப்பது அருவெறுக்கத்தக்க நிலமை. ஆசிரியர்களின் ஊழிய நிபந்தனைகள் சட்டபூர்வமாய் நிச்சயிக்கப்படவேண்டும். அதில் எவ்விதமான சந்தேகத்துக்கும், விபரீதங்களுக்கும் இடங்கொடுக்கக்கூடாது. சட்டபூர்வமான நிபந்தனைகள் ஆசிரியர்களின் உத்தியோகத்தைப் பாதுகாப்பதா யிருக்கவேண்டும் ஆசிரியர்களைத் தங்கள் இஷ்டப்படி மானேஜ்மெண்டுகள் நடத்தவோ எடுத்துவிடவோ விடக்கூடாது. இவ் விஷயம் மகாநாட்டில் பலரால் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறப் பட்டது.

ஆரம்பக் கல்விக்கென ஒரு தனி இலாகா ஏற்படுத்தி, அதை ஒரு பிரத்தியேக அதிகாரியின் நிர்வாகத்தில் வைக்கவேண்டும். அந்த அதிகாரிக்கு யோசனை சொல்ல ஒரு கல்விபோர்டு ஏற்படுத்தவேண்டும். இப்போதுள்ள அதிகாரிகள் பரிபாலனத்தையே அதிகயாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது. கல்வியைப் பரப்புவதில் புதிய புதிய திட்டங்களை வகுத்து, மேன்மேலும் விருத்திசெய்யப் போதிய அவகாசம் அவர்களுக்குக் கிடையாது. இவைகளை யெல்லாம் காரியத்தில் காணவேண்டுமானல் தீவிர கிளர்ச்சி செய்யவேண்டும். ஏகோபித்து செய்யும் முயற்சிக்கே மதிப்புண்டு. ஆரம்ப ஆசிரியர்கள் இன்னும் உரக்கத்தில் இருக்கிறுர்களென்றே சொல்லவேண்டும். மாதா மாதம் கூடும் ரேஞ்சு ஆசிரியர்களின் கூட்டங்களைத் தவிர, அவர்களுக்குள் வேறு எவ்வித ஒற்றுமைப்பாடும் காணவில்லை. தாலூக்கா யூனியன்கள், முக்கால்வாசி இடங்களில் இல்லவேயில்லை. இரண்டொரு இடங்களில் இருக்கும் யூனியன்கள் தூங்குகின்றன. ஒவ்வொரு தாலூக்காவிலுமுள்ள போர்டு, பஞ்சாயத்து, உதவிபெறும் பாடசாலை உபாத்தியாயர்கள், தனித்தனி தாலூக்கா யூனியன்களை ஏற்படுத்திக்கொண்டு, அவைகளை தெ. இ. ஆ. சங்கத்துடன் இணைத்துக் கொள்ளவேண்டும். தற்போது இவர்களெல்லாம் ஒன்றுசேர்ந்த தாலூக்கா சங்கங்களையோ, ஜில்லா சங்கங்களையோ ஏற்படுத்திக் கொள்வதைச் சர்க்கார் தடுத்திருக்கிறுர்கள். இந்தத் தடையை நீக்கும்படி ஆசிரியர்கள் சர்க்காரை ஏகோபித்துக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

ஆசிரியர்கள் தொழில் முறையில், பொதுவான ஸ்தாபனங்களின் மூலம் ஒற்றுமைப்பட்டு, அவ்வப்போது கல்வி சம்மந்தமான பிரச்னைகளையும், தங்கள் குறைகளையும் அதிகாரிகளுக்கு ஒருமனதாய் எடுத்துரைத்தாலொழிய, அவர்கள் நிலமை சீர்படுவதற்கு வழியில்லை. இதை ஆரம்ப ஆசிரியர் உணர்ந்து, தங்கள் கடமையைச் செய்ய முன் வருவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

கலையும் கைத்தொழிலும்

II

By R. M. SAVUR,
Divisional Inspector of Schools, Coimbatore.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலும், உயர்தரப் பாடசாலைகளிலும் முதல் ஐந்து வகுப்புகளில், கல்வி கற்கும் மாணவர்களுக்கு கலை, கைத்தொழில் பாடங்களைப் போதிப்பதற்காகத் தனி உபாத்தியாயர்கள் தேவையில்லை.

முதல் ஐந்து வகுப்புகளில் கலைப்பாடம்

சிறு குழந்தைகளுக்குக் கலைப்பழக்கம் உண்டாக்குவதற்கு ஆசிரியர் பெரிய கலை வித்வானாக இருக்கவேண்டியதில்லை. குழந்தைகளிடம் அன்புகாட்டி, அவர்களின் மனோவிகாரங்களை அறிந்து, அவைகளைத் தகுந்த முறைகளில் உற்சாகப்படுத்தும் திறமை பெற்றிருக்க வேண்டும்.

சித்திரங்களை வரைவதில் பழக்கம் உண்டாகும்போது சிறுவர்கள் பெரியதாகவும், வீச்சாகவும் எழுதப் பழக வேண்டும். சிறு கடுதாசிகளில் பென்சிலால் இவ்வாறு எழுத முடியாது.

ஆகையால் பெரிய கடுதாசிகளை உபயோகித்தல் நலம். வகுப்பில் மேஜை முதலியவை இல்லாமல் இருக்கக்கூடும். ஆனால் ஒவ்வொரு குழந்தையும் கற்பலகை வைத்திருப்பது உண்டல்லவா? காகிதத்தை கற்பலகையின் மீது 'கிளிப்' மூலமாக பொருத்திக் கொடுத்தால், சிறுவர்கள் சுலபமாக சித்திரம் வரைதல் கூடும். சித்திரங்களுக்கு வர்ணம் பூசுதல் அவசியமாதலால், வர்ணங்களும் அவர்களுக்குத் தாராளமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். வாடர் கலர், க்ரேயான் முதலியவை விலை அதிகம். டின்களில் விற்கப்படும் மலிவான வர்ணங்களை வாங்கிக் கொடுக்கலாம்.

இளமைப் பருவத்தில் சிறுவர்கள் மனதில் தோன்றும் உருவங்களைத்தான் வரைவது சாத்தியமாகும். முதல் மூன்று வருஷங்களில் சிறுவர்களால் எதிரில் இருக்கும் ஒரு பொருளைப் பார்த்து அதைப் போல் வரைவது முடியாத காரியம். ஆகையால் தமது அனுபவத்தைக் கொண்டு சிறுவர்கள் சித்திரம் வரைவது நலமாகும். உதாரணமாக ரயில்வண்டிகளைப் பார்த்த சிறுவர்கள் ரயில் வண்டிகளைச் சித்தரிக்கலாம். கதைப் பாடங்களில் வரும் நிகழ்ச்சிகளை படமாக வரைவதும் நலமாகும்.

ஆரம்பம் முதல் குழந்தைகளுக்கு வர்ணத்தில் இயற்கையாக உள்ள ஆசையை பயன்படுத்துவது அவசியமாகும். சித்திர அமைப்பிலும் வர்ண வேலைகளிலும் கவனம் செலுத்த வேண்டும். வர்ணத்

காகிதம், மணிகள் முதலியவற்றால் பலவித சித்திர வேலைகளை செய்யச் சொல்லலாம்.

கைத்தொழில்

ஆரம்பத்தில் சிறு குழந்தைககளுக்குக் கைத்தொழில் என்று தனியாக வேலை அவசியமில்லை. மற்ற பாடங்களை வாசிக்கும்போது பள்ளிக்கூடத்தில் செய்ய வேண்டிய வேலையுடன் இதை இணைத்துக் கொள்வது நலம். முக்கியமான தசைநார்களுக்குப் பயிற்சி அளிப்பதே நோக்கமாகக் கொள்ளவேண்டும். இளங்குழந்தைகள் விளையாட்டுச் சாமான்களை ஒழுங்காக வைத்துக்கொள்ளப் பழக்கம் பெற வேண்டும். தினந்தோறும் செய்யும் காரியங்களை சரியாகச் செய்யும் திறமை பெறுவது அவசியம். குளிப்பது, உடுப்பது, செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவது, செடிகளை நடுவது, பூப்பறிப்பது, சாமான்களை ஒழுங்காக அடுக்கிவைப்பது, முதலிய சிறு காரியங்களில் கவனம் செலுத்தி, சிறுவர்கள் செய்வதைச் திருந்தச்செய்யும் பழக்கம் பெறுமாறு செய்ய வேண்டும். காரியம் செய்யும்போது சிறுவர்களுக்கு சுதந்திரம் கொடுத்து வஸ்துக்களின் தன்மையை அறிந்து கொள்ளும்படி விடவேண்டும். நாளடைவில் பல திறப்பட்ட பொருள்களைக் கையாண்டு, சாமான்களைசெய்யக் கற்கவேண்டும். களிமண் உருவங்களை செய்வது நல்ல பயிற்சியாகும் என்பதில் சந்தேகமில்லை.

நான்காவது ஐந்தாவது வகுப்பில் படிக்கும் சிறுவர்கள் கைத்தொழில் வேலையில் ஊக்கம் காட்டுவதைப் பார்க்கலாம். உபயோகமான சாமான்களைச் செய்ய ஆசைப்படுவார்கள். களிமண், காகிதம் முதலியவைகளைவிட உறுதியான வஸ்துக்களை கொண்டு வேலை செய்யும் திறமும் அவர்களுக்கு இருக்கும். அளக்கவும், ஜாக்கிறதையாக வேலை செய்யவும் அவர்களால் முடியும். ஆகையால், ஏதாவது ஒரு தொழில் அவர்களுக்குக் கற்பிக்கலாம். இந்த வகுப்புக்களில்கூட கைத்தொழில் கற்பிக்க தனி உபாத்தியாயர் தேவையில்லை. மற்ற பாடங்களைக் கற்பிக்கும் உபாத்தியாயரே இரண்டொரு சுலபமான தொழில்களை எளிதில் கற்றுக்கொள்ளலாம்.

கைத்தொழில் கற்பிப்பதின் பயன்

பிள்ளைகள் ஐந்து வருஷம் பயிற்சி பெற்றபின் பின்வரும் திறமைகளை பெறுவது அவசியம். தமது தசைநார்களை அடக்கி ஆளவும், உறுதியான பொருள்களைக்கொண்டு தொழில் செய்யவும் பழக்கம் பெறுதல். பலவித ஆயுதங்களைக் கையாளவும், சுத்தமாகவும், சரியாகவும், வேலை செய்யப் போதிய திறமை. அளக்கவும், அளவுக்கு தகுந்தபடி வேலை செய்யவும் தெரிந்துக்கொள்ளுதல், அழகிய சித்திர அமைப்பைப் பாராட்டி, ஜாக்கிறதையாக திருத்தமாக வேலை செய்யக்கூடிய அறிவு.

(தொடரும்)

இந்திரியப் பயிற்சி

By P. Subrahmanya Ayyar,
Retired Teacher, Thyagarayanagar.

சைதாப்பேட்டையில் போதனுமுறைக் கல்லூரியில் ஒருயர்தர பாடசாலை இருப்பது அனைவருமறிந்ததே. அப் பாடசாலையில் பாலர் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலுள்ள பகுதிக்குக் 'கிண்டர் கார்டன் ஸெக்ஷன்' என்று பெயர். இக் கல்லூரியில் உபாத்திமைத் தொழிற்பயிற்சி பெறவரும் மாணவர்க ளெல்லோரும் அவர்களுடைய ஆசிரியர் தலைமையின் கீழ் போதனுமுறை சம்பந்தமான ஆராய்ச்சிகள் பல நிகழ்த்துவார்கள். மேல்நாட்டு நிபுணர்கள் நிகழ்த்திய சோதனைகளின் முடிவாகக் கண்டறியப்பட்ட விஷயங்களைப் புத்தகங்களின் வாயிலாகவும் மாதாந்திர சஞ்சிகை முதலானவற்றின் வாயிலாகவும் படித்து அம்முடிவுகள் சரியாவென்று சோதித்துப் பார்க்கவும் மாணவர்கள் இக் கல்லூரியில் ஆராய்ச்சிகள் பல நிகழ்த்துவார்கள்.

உதாரணம் ஒன்றொன்று கூறுவாம். 'மேடம் மாண்டிஸோரி எனும் பெயரிய இதாலிய அம்மையார், அவர் நடத்திவரும் பள்ளிக் கூடத்தி லோருண்மை கண்டார். சிறு குழந்தைகட்கு இந்திரியப் பயிற்சி தருவதால் அவர்களுடைய இந்திரியங்களின் சக்தி கூர்மைப் படுகிறது. இத்தகைய பயிற்சிபெற்ற குழந்தைகள், இப் பயிற்சியற்ற வர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்களாக விளங்குகிறார்கள். பொதுவாக வாழ்வி லெக்காரியத்திற்கும், சிறப்பாக பள்ளிக்கூட பாடங்களில் தேர்ச்சியுடைதற்கும் இப்பயிற்சி பெருந்துணையாக உதவுகிறது' என்ற உண்மையே அவ்வம்மையார் கண்டு உலகத்தாருக் குதவியதாகும்.

இவ்வுண்மையைப் படித்தறியும் உபாத்திமைத் தொழிற்ப் பயிலும் மாணவர், நடைமுறையிலு மிதைத் தமது கண்களாலேயே காணவும் அவாவுகிறார்கள். ஆனதுபற்றி எவ்வெவ் வுபகரணங்களைக் கொண்டு மாண்டிஸோரி அம்மையார் குழந்தைகட்கு இந்திரியப்பயிற்சி யளிக்கிறாரோ அவைகளையே யுபயோகித்து அதே வகையில் கிண்டர் கார்டன் பகுதியிலும் பாலர் வகுப்புக் குழந்தைகள் பயிற்சி யளிக்கப்படுகிறார்கள். ஒரு வருஷத்தில் இருமுறையோ அல்லது மும்முறையோ இப்படிப்பட்ட பயிற்சி வகுப்புகள் நிகழ்வதனல், இந்திரியப் பயிற்சி என்பது இவ் வகையதென் றுணர்த்தமட்டுமே உதவும். குழந்தைகளினுற் பெரும் பயனடைதல் இயலாது. இப் பயிற்சியினுற் பெரும்பயன் விளைய வேண்டுமானுல் குழந்தைகள் மூன்று அல்லது நான்குமாத காலம்

தொடர்ச்சியாக இடைவிடாமற் பயிற்சியி லீடுபட்டுத் திளைத்திருக்க வேண்டும்.

"இது என்ன நிறம்? பச்சை. நீ சொல்லு; நான் சொல்லுவதுபோல் சொல்லு; பச்சை என்று சொல்லு; பச்சைக் காற்ருடி எடு; எது பச்சைப்பந்து எடுத்துக் காட்டு பார்ப்போம்" என்றிவ்வாறெல்லாம் சொல்லி குழந்தைகட்குப் பல்வேறு குணங்களின் மொழிக் குறிப்புகளினது பழக்கத்தை யுண்டுபண்ணுவது இந்திரியப் பயிற்சியாகாது. இவ்வுண்மையை யாசிரியர்கள் அறியவேண்டுவது அவசியமாகும்.

"இந்தக் காற்ருடியும் பச்சைதான் அந்த நூற் பந்தும் பச்சைதான்" என்று சொல்லவும் "இந்த கண்ணுடி பச்சைதான். அந்த பட்டு பச்சை அல்லவே அல்ல அது வேறு ஏதோ கலப்பு நிறமாகக் காணப்படுகிறது" என்று சொல்லவும் "இந்த 'மை" அவ்வளவு பச்சையாக இல்லையே; அதைவிட சற்றே குறைந்தே இருக்கிறது." என்று சொல்லவும் திறமை பெறுவதே **(being able to discriminate between even very slight shades of differences in colour, shape size etc.,)** சரியான இந்திரியப் பயிற்சியின் பலனும்.

"என் வகுப்புக் குழந்தைகட்கு 'இது பச்சை, அது சிகப்பு இது குட்டை, அது நீளம் என்று அறிந்து சொல்வது மிக எளிதாயிற்றே. இவ் விஷயங்களைப் போதிக்கும்படி நீங்களென்னை வற்புறுத்துகிறீர்களே" என்று சில ஆசிரியர் கேட்பதுண்டு. இவ்வாசிரியர் விஷயங்களைச் சரியாக உணராதவர்களே யாவர். குண பேதங்களுடைய மொழிக்குறிப்பைச் சொல்லத் தெரிவதே பயிற்ச்சியின் நோக்கமென்றும், மொழிக் குறிப்பு தெரிந்த குழந்தைகளுக்கு இனி பயிற்சி தேவையில்லை யென்றும், நினைப்பது முதல் தவரும். இந்திரியப் பயிற்சி குழந்தைகளுக்குக் கொடுக்கும்படி வற்புறுத்தும் பள்ளிச் சோதனையாளரது நோக்கம்தான் என்ன? பயிற்சியையும் பயிற்சியின் பலனையும் அடைந்தவரும் வயதுமுதிர்ந்தவருமான சிறுர்களுக்குமிப் பயிற்சி தரவேண்டு மென்பதல்ல. முதல் வகுப்பிலிருக்கும் குழந்தைகளுள் எவரெவர்களுடைய வயதிற்கும் மனேமுதிர்ச்சிக்கும் இப் பயிற்சி ஏற்றதாமோ அவர்களை தனியாகக்கூட்டி பயிற்சி யளிக்க வேண்டுமென்ற பொருளுடையதாகவே சோதனையாளருடைய வற்புறுத்தலைக் கொள்ளாதது இரண்டாவது தவருகும்.

ஒருவனுக்கு ஒரு கால் நொண்டி. அவன் ஊன்றுகோலினுதவி கொண்டு நடக்கிறுன். நொண்டியான காலுக்குப் பதிலாக அவன் கோலும் அக் கோலைத் தாங்கும் அவன் கையுமே உதவுகின்றன. கோலைத்தாங்கும் கையானது மிகுந்த வலிவோடுகூடி விளங்குகிறது. நாள் தவருமல் தேகப்பயிற்சி செய்துவரும் ஒரு திடசரீரியான பயில்வா

னுடைய கைகளையே இதற்குவமை கூறலாம். இந்த நொண்டியின் கை இவ்வளவு வலிவுற்ற காரணமென்ன?

ஒரு செவிடன் தன் எதிர்நின்று பேசுவோனுடைய வாய், உதடுகள், நாக்கு முதலியவற்றின் அசைவுகளைக் கண்களாற் கூர்ந்து கவனித்தே, அவன் சொல்வது இது என்று அறிந்துகொள்ளுகிறான். இவனது கண்கள் இத்துணைத்திறம் பெற்றதெங்ஙனம்?

தேகப்பயிற்சி செய்பவர்கள் சிறிது தூரம் தங்கள் கைகளாலே தலைகீழாக நடக்கிறார்கள். இப்படிப் பயிற்சி செய்பவர்களது கைகள் எத்துணை தேர்ந்து இருக்கின்றன பாருங்கள். ஏன்? தேகத்தின் முழு பளுவையும் கைகள் தாங்கப் பழகினதனால் கால்களுக்குள்ள பலமும் திறனும் கைகளடைகின்றன. நம் தேகத்திலுள்ள உறுப்புகள் அவைகளுக்கேற்பட்டுள்ள முழு வலிவும் திறனும் அடைதற்குப் போதிய வேலை தரப்பெறுவதில்லை. போதி வேலை தந்து முழு வளர்ச்சி அடைவிக்காததற்கு நம் சோம்பலும் அறியாமையுமே காரணமாம். மேலே சொன்னது போன்ற அங்கவீனர்களுக்கு விதிவசத்தால் ஒரு நெருக்கடி நேருகிறது. தாம் சோம்பலுள்ளவர்களே யாயினும் அதற்கிணங்கக் கூடுவதில்லை. பழுதான அங்கங்களின் வேலையையும் பழுதற்ற சில அங்கங்கள் செய்து முடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதால் அவை தேற்சிக்குப் போதிய வேலை கிடைக்கப் பெறுகின்றன.

"கண்ணைக் கெடுத்த தெய்வம் மதியைக் கொடுத்தாற்போல" என்றொரு பழமொழி வழங்குவதுண்டு. கடவுள் பக்ஷபாதத்தால் கண்களைக் கெடுக்கவுமில்லை. அபரிமிதமான மதிநுட்பத்தைக் கொடுக்கவுமில்லை. இப் பழமொழியிலிருந்து யாமறியக் கிடப்பதுதானென்ன? கண்கள் பார்வை யிழந்தன. மதிநுட்பம் விருத்தியடைந்திருக்கிறது. இவ்வளவுதான். கண்கள் பார்வை இழந்ததே மதிநுட்பமானதற்குக் காரணம். கண்கள் இருந்திருந்தால் புத்தி எவ்வளவு வேலை செய்திருக்குமோ அதைக்காட்டிலும் இப்போது அதாவது கண்களையிழந்த இந்நிலையில் அநேக மடங்கு அதிகமான வேலை செய்ய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதன் பலனாக புத்திக்கு இவ்வளவு திறமை ஏற்பட்டிருக்கிறது.

"எவ்வெவர்க்கும் ஒவ்வொன்றெளிது" என்றொரு வாக்கியமுண்டு. நமக்குப் பகலில் நன்றாக கண் தெரியும். இரவில் விளக்கு வெளிச்சமோ, நிலா வெளிச்சமோ, அல்லது நக்ஷத்திர வெளிச்சமோ இல்லாவிட்டால் கண் தெரியாது. பூனை முதலான சில ஜந்துக்களுக்கு பகலில் தெரிவதைக் காட்டிலும் இரவில்தான் நன்றாகக் கண் தெரியும். நமக்கு பகலில் பார்ப்பது எளிது. பூனைக்கு இரவில் பார்ப்பது எளிது. நமக்குப் பகலில் நன்றாகக் கண் தெரிவதோடு இரவில் பார்க்கும் திறன் பூனைக்குச் சரியாக பெறுவோமானால் அது மிகவும்

விரும்பத்தக்க நிலையாகுமன்ரோ ? அப்போது நமது சக்தியை இரட்டை மடங்கு அதிகமாக்கிக் கொண்டதாகுமல்லவா ?

சில வயதான குழந்தைகட்குக் கூட இரவில் வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு வெளியே போய்வர விளக்கினுதவியில்லையேல் முடிவதில்லை. எங்கேயாவது சுவரில் போய் முட்டிக்கொள்ளுகிறார்கள். இரவில் வழிதெரிந்து போம் சக்தி மனிதருக்கிருந்தது. அச் சக்தி உபயோகிப்பாரின்றி நசித்து நாசமடைந்திருக்கிறது. விளக்கு வெளிச்சம் கிடைக்காத நெருக்கடியான சந்தர்ப்பங்களே இச்சக்தியினபிவிருத்திக்கு ஏற்றகாலமாகும்.

மனிதருடைய அனுதரவினால் வஸ்துக்களைத் தொட்டறியும் சக்தியானது உபயோகிக்கப்படாமல் மங்கிப்போய்ப் பாழடைந்து இருக்குமிடந் தெரியாமலிருக்கிறது என்ற உண்மையை மாடம் மாண்டிஸோரி அம்மையார் முதலில் கண்டறிந்தார்கள். இச் சக்தி குருடர்களிடத்தே தழைத்தோங்கி விளங்குகிறது. எனக்கிருக்கும் திறன்போதுமென்று அற்பத் திருப்தியோடு இராமல் கண்களும் முழுத்திறன் பெற்று விளங்க வேண்டும். கண்ணில்லாத குருடனுடைய தொட்டறியும் சக்தி எத்துணைத் திறம்பெற்று விளங்குமோ அந்த அளவில் அச் சக்தியும் என்னிடத்தே பிரகாசிக்கவேண்டும் என்று ஒருவன் கோறுவது சாலச்சிறந்ததல்லவா ?

இரட்டையர் என்ற புலவர்களைப்பற்றி நாம் கேட்டிருக்கிறோம். குருடன் தோளின்மீது நொண்டி ஏறிச் செல்வது வழக்கம். குருடன் நொண்டிக்குக் கால்களை யுதவினான். நொண்டி குருடனுக்குக் கண்களை யுதவினான். இவ்விருவரும் சேர்ந்திருந்தவரையில் அவர்களுக்குக் கண்களில்லாக் குறையுமில்லை. கால்களில்லாக் குறையுமில்லை.

அதுபோல மிகுந்த திறம்பெற்ற கண்களையுடைய ஒருவனும், தொட்டறியும் சக்தி மிகுந்த உன்னத நிலையிலுள்ள ஒரு குருடனும் இரட்டையரைப்போல் சேர்ந்து வாழ்வதாக வைத்துக்கொள்வோம். இவர்கள் சாமானிய ஒரு மனிதனைக் காட்டிலும் எவ்வளவு திறம்பட வாழ்வார்கள் என்று உன்னுங்கள். பார்வைத்திறனும் தொட்டறியும் திறனும் ஒருவனிடத்தே பொருந்தி இருக்கப்பெறின் அது எத்துணை சிலாக்கியமானதாகும். எண்ணிப்பாருங்கள்.

இந்நோக்கோடேதான் மாடம் மாண்டிஸோரியார் ஒவ்வொரு இந்திரியத்தையும், பூராசக்தியும் அடையும் அளவுக்கு தனித்தனியே வேலையிலீடுபடச் செய்து பயிற்சி தரவேண்டுமென்ற ஆர்வங்கொண்டார். தாங்கள் ஏற்படுத்தி நடத்திவரும் குழந்தைகளுக்கான பள்ளிக்கூடத்தில் இந்திரியப் பயிற்சி குழந்தைகளுக்கு தந்து அதனால் விளையும் பெரும் பயனை உணர்ந்து அப்பயனை உலகத்திலே எல்லாத்தேயத்து குழந்தைகளும் அடையுமாறு அவ்வம்மையார் பிரசாரமும் செய்துவருகிறார்கள்.

சிறுவர் பகுதி

I விடுகவிகள்.

இங்குள்ள படங்களைப் பார். அடியிற்கண்ட விடு கவிகளைப்படி. விடுகவிகளுக்குப் பொருத்தமான விடைகளைக் கண்டுபிடி:

1. பெட்டியாவது பெட்டி, நூதனமான பெட்டி
பெருத்த வாயுள்ள பெட்டி, சங்கீதம் பாடும் பெட்டி
கேட்காத பாட்டுகளும், பார்க்காத பாடகர்களும்
ஒளித்திருக்கும் பெட்டி
பாட்டெல்லாம் தட்டினிலே, விசையெல்லாம் ஊசி
முனையிலே, அந்தப்பெட்டி என்ன பெட்டி ?

2. யானை குதிரை சிங்கம் ஏறுகிறார் பாலர்
ஒட்டை எருது நரியும் ஓடுகிறது பார்
தொட்டில் உண்டு ஊஞ்சல் உண்டு
காலணா கொடுத்து ஓடிக்களிக்கிறார் பாலர். அது
என்ன ?

3. இரண்டுமாடு இழுத்துவர ஒருவன் ஓட்டிவர,
உலக்கை குத்திவர, நொய் என்று கத்திவர
நெய் உருகிவர, சக்கையெல்லாம் பிழிந்துவர. அது
என்ன ?

4. அசைந்து அசைந்து வருகிறது
ஆறு சக்கரம் உருண்டு வருகிறது
குதிரைகள் பாய்ந்துவர கொடிகள் பறந்துவர
தப்பட்டை கொட்டிவர நாதஸ்வரம் ஊதிவர
நாலுவடம் பூட்டி நானூறுபேர் இழுத்துவர!
நாலாயிரம்பேர் "ஹர ஹர" என்று கூவிவர, அது
என்ன ?

5. வாரும் வாரும் சிறுவர்களே
படங்கள் கண்டு களிப்பீரே
சென்னைப் பட்டணம் பார் பார்
ஹைக் கோர்ட்டு பார்பார்
புகைக் கப்பல் பார் பார்
சண்டைக் கப்பல் பார் பார்
காலணா கொடுத்து பார் பார் அது என்ன ?

6. பச்சை பச்சை மிளகாய் பெங்களூர் மிளகாய்,
சின்ன சின்ன மிளகாய் சிங்கார மிளகாய்
தஞ்சாவூர் மிளகாய் தோட்டத்து மிளகாய்
நாக்கிலே போட்டால் ருசிதான்
வாயிலே போட்டால் தண்ணீர் தான்
தம்படிக்கு ஒன்றுதான் ; அது என்ன ?

II. வேடிக்கைக் கணக்கு

×		×
	?	
×		×

நான்கு மூலைகளிலும் ஏதாவது நான்கு எண்களை நினைத்துக் கொள். * * * *

? நடுவில் ஒரு எண்ணை நினைத்துக் கொள்.

நான்கு மூலைகளிலுள்ள எண்களைக் கூட்டி மொத்தத்தைச் சொல்லு.

நேர் எதிர் மூலையாக இருக்கிற எண்களைக் கூட்டி மொத்தத்தைச் சொல்லு.

நான் உனக்கு நடுவில் இருக்கிற எண்ணைச் சொல்லி விடுகிறேன்.

5		8
	3	
4		2

உதாரணம்

நான்கு மூலை எண்களைக் கூட்ட மொத்தம் 19-வரும்.

நேர் எதிர்மூலை எண்களைக்கூட்டி 4+3+8 + 5+3+2 மொத்தம் 25-வரும்.

நடு எண் கண்டறியும் விதம்

மேலே சொல்லிய இரண்டு கூட்டுத் தொகைகளுக்குள்ள வித்தியாசமாகிய 6ன் பாதியே நடு எண் ஆகும். அதாவது 3 தான்.

இதிலுள்ள இரகஸ்யம்.

நேர் எதிர் மூலை எண்களைக் கூட்டுகையில் 2 தடவை நடு எண்ணைக் கூட்டியிருக்கிறாய். இரண்டு கூட்டுத் தொகைகளுக்கு வித்தியாசம் ஏற்பட இரண்டு தடவை கூட்டப்பட்ட இந்த நடு எண் தான் காரணம். ஆகவே வித்தியாசத்தில்

பாதிதான் நடு எண் ஆகும். உன் சிநேகிதர்களுடன் இம் மாதிரி சில கணக்குகள் போட்டுப் பழகு

2. கணக்கு விடுகவி

அரும்பாடுபட்டுத் தேடின சொத்தில் அரையே அரைக்காலை காட்டிற்கு ஓட்டினான்.

காலே அரைக்கால் சொத்தை நாட்டிற்குத் துரத்தினான். எல்லாம் ஓடினதும் உயிர்விட்டான் அயோத்திவேந்தன். விடுகவியை விடுவிப் போர்க்கு அயோத்தியே இனாம்.
விடை தசரதன்.

வழி தசரதனுக்கு மனைவிமார் மூன்று பேர். புத்திரனில்லாமல் புத்திரகாமேஷ்டியாகம் செய்தான். யாக புருஷன் பொற்கிண்ணத்தில் பாயசம் தந்தான்.

கோசலை	கைகேயி	சுமித்திரை
$\frac{1}{2}$	$\frac{1}{4}$	$\frac{1}{8}+\frac{1}{8}$
பங்கு	பங்கு	இரண்டு அரைக்கால் பங்கு
இராமன்	பரதன்	லக்ஷ்மணன் சத்ருக்கினன்

காட்டிற்குப்போனது இராமனும் லக்ஷ்மணனும்
$\frac{1}{2} + \frac{1}{8}$ அரையே அரைக்கால் பங்கு.

நாட்டிற்குப் போனது பரதன் சத்ருக்கினன்
$\frac{1}{4} + \frac{1}{8}$ காலேயரைக்கால் பங்கு.

பிள்ளைகள் ஒருவரும் ஊரிலில்லா சமயம் தசரதர் காலமானார்.

3. ஞாபகம் வை

எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்
ஒரு சாண்வயிற்றிற்குத்தான் இந்த அரும்பாடு.

உன் சாண் அளவால் உன் உடம்பு உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் 8 சாண் ஆகும்.

இடுப்பு வரையில் 4 சாண்: அந்த இடத்திற்கு அரை என்றும் பெயர்.

முழங்காலுக்குக்கீழ் பாதம் வரையில் 2 சாண். அந்தப் பாகத்தைக் கால் என்று சொல்லுகிறோம்.

சென்னை மாகாணம் 32-ம் கல்வி மகாநாடு

சென்ற மே மாதம் 15 வ. சித்தூர் ஜில்லாவில் ரிஷி வனத்தில் சென்னை மாகாணக் கல்வி மகாநாடு மூன்று நாட்கள் வெகு விமரிசையாக நடந்தது. மலைகளும், பச்சை பசேலென்ற மரங்களும் சூழ்ந்து இயற்கை வனப்பு மிகுந்த ரிஷிவனத்தில், பெரிய ஆலமரத்தின் கீழ், காலை 8-30 மணிக்கு மகாநாடு கூடிற்று. எட்டு மணிக்கு முன்னதாகவே பிரதிநிதிகளும், வரவேற்புக் கமிட்டி மெம்பர்களும், மகாநாட்டு உத்தியோகஸ்தர்களும், தென்னிந்தியா ஆசிரியர் சங்க காரிய கமிட்டியாரும், மற்ற பிரமுகர்களும் வரிசையாக ஊர்வலம் சென்று ஆலமரத்தை அடைந்தனர்.

இந்த மகாநாட்டிற்கு 19 ஜில்லாக்களில் உள்ள பலஉபாத்தியாயர் சங்கங்களிலிருந்து பிரதிநிதிகள் கூடி இருந்தனர். சித்தூர் ஜில்லாவிலிருக்கும் பல உத்தியோகஸதர்களும் பெரியோர்களும் மகா நாட்டிற்கு வந்திருந்தனர்.

ராவ் சாகிப், ஸ்ரீ C. வெங்கிடரமண அய்யர், பப்ளிக் பிராஸிக்கூட்டர் வரவேற்புக் கமிட்டியின் சார்பாக பிரதிநிதிகளை வரவேற்றார். ஸ்ரீ B. சஞ்ஜீவராவ் I. E. S. மகாநாட்டை திறந்து வைத்தார்.

Prof எ. ராம அய்யர் மகாநாட்டிற்குத் தலைமை வகித்துத் தமது பிரசங்கத்தை நடத்தினர்.

ஸ்ரீமான்கள் M. S. சபேசன்; **Dr. A.** லக்ஷ்மண சுவாமி முதலியார், T. T. கிருஷ்ணமாச்சாரி, Dr. C. R. ரெட்டி, V. சாரநாதன், A. V. குட்டிகிருஷ்ணமேனன், குலபதி P. A. சுப்பிரமணிய அய்யர், K. ஸ்ரீனிவாசன், Dr. G. S. அருண்டேல், திவான் பகதூர் K. S. ராமசுவாமி சாஸ்திரியார், Sir மிர்ஜா இஸ்மேயில், Sir C. P. ராமசுவாமி அய்யர், P. சேஷத்ரி, உபாத்தியாய கார்ய சங்கப் பிரவீண எக்ஞ நாராயண அய்யர், மிஸ் A. B. வான்டோரன், K. சஞ்சீவகாமத், N. கல்யாணராம அய்யர், M. S. ஏகாம்பர ராவ், Rev G. P. ஜேம்ஸ், ராஜா ராமராயணிங்கார் முதலிய பெரியோர்கள் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்திகளை ஸ்ரீ Prof சுந்தரராவ் வாசித்தார்.

சித்தூர் போர்டு ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ J. டானியல் வேண்டுகோளின்பேரில் ஸ்ரீ T. P. சந்தான கிருஷ்ண நாயுடு பொருட்காட்சியைத் திறந்து வைத்தார்.

இவ்வருஷம் நடந்த மகாநாட்டில் வழக்கப்படி ஆரம்பக் கல்வியின் பல அம்சங்களைப்பற்றி யோசிக்கப்பட்டது. பொதுமக்கள் அனே



ஆசிரியர் சங்கத்தின் காரியக் கமிட்டியார்

16 JUN 1941
MADRAS

மகாநாட்டின் தலைவர் பேசுகிறார்

ஊர்வலம்



மகாநாடு



தலைவர்



பொருட் காட்சி சாலை
திறப்பு

வருக்கும் கொடுக்கவேண்டிய கல்வியைப்பற்றி ஒரு சர்ச்சை நடந்தது. ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசியபோது சொன்னதாவது: நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும். இவ் விஷயத்தைப்பற்றி பொது மக்களுக்கும் அதிகார வர்கத்தினருக்கும் அபிப்பிராயபேதம் இருக்கிறது. இலவச கட்டாய கல்வி வேண்டுமென்று பொதுமக்கள் விரும்புகின்றனர். இதை சாத்திய மாகச் செய்ய அரசாங்கத்தரால்தான் முடியும். ஆனால் அதிகார வர்க்கத்தினர் நாளாவட்டத்தில் மெதுவாக இலவசக் கட்டாயக் கல்வியை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று நினைக்கின்றனர்.

அதுவும் குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி கொடுக்கவேண்டு மென்று நினைக்கின்றார்களே தவிர, முதியோர் கல்வியைப்பற்றியே நினைப்பதில்லை.

அதிகாரவர்க்கத்தினர் கல்விமுறை இராஜீயத்திற்கு சம்மந்தப் படாமல் இருக்கவேண்டுமென்று கூறுகின்றார்கள். ஆனால் கம்பெனி யார் காலம் முதல் கல்வி இராஜீய விஷயத்தைப் பொறுத்துத்தான் இருந்து வருகிறது.

மேல்நாட்டுக்கல்வி இங்கு ஏற்பட்டபோது நமதுநாட்டுத் திண்ணை பள்ளிக்கூடங்களும், பாடசாலைகளும், முக்தாப்புக்களும் ஒழிந்து விட்டன. படிக்கும் சிறுவர்களுக்குத் தொழில்களில் பயிற்சி அளிக்கப் படவில்லை. மேலும், கல்வி அபிவிருத்திக்காக பணம் அதிகமாக செல வழிக்கப்படவில்லை. காபிடேஷன் கிராண்ட், ரிஸல்ட் கிராண்ட், என்று பல திட்டங்களைக்கொண்டு கல்வி அபிவிருத்தியை ஒரு அளவுக்குள் வைத்திருந்தார்கள். இப்போதுள்ள கிராண்டு திட்டத்தினால் கல்வி அபி விருத்தியாகாது என்று தான் சொலலவேண்டி யிருக்கிறது. ஆசிரியர் களுக்கு உத்தியோகம் காயமாக இருக்கும் என்று சொல்ல முடியாது. குழந்தைகளுக்கு கல்விகற்கும் சௌகரியங்களும் கொடுக்கப்படவில்லை.

ஸர் A. P. பாத்ரோ கல்வி மந்திரியாக இருந்தபோது ஆரம்பக் கல்வி பரவி வந்தது. அதன்பின் பள்ளிக்கூடங்களில் தேக்கமும் சிதறு தலும் அதிகமாகிவிட்டன. அநேக பள்ளிக்கூடங்களை நஷ்டத்தில் நடத்தி வந்தார்கள். அறியாமை என்ற அரக்கனோடு செய்யவேண்டிய யுத்தத்தை, மனேஜ்மெண்டார் ஆசிரியர் முதலியவர்களுடன் செய்யத் தொடங்கினர்.

கல்வி அதிகாரி வெளியிட்டுள்ள அறிக்கைகளிலிருந்து பள்ளிக் கூடங்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதாகவும், ஆனால் படிக்கும் பிள்ளைகளின் தொகை அதிகமாகிவிட்டதாகவும் தெறிகிறது. அரசாங் கத்தார் இலவசக் கட்டாயக் கல்வியை உடனே இலக்ஷியமாகக்கொண்டு அதற்கு வேண்டிய பணத்தை பட்ஜெட்டில் ஒதுக்கிவைக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் கேட்க வேண்டும.

ஸ்ரீ எஸ் நடராஜன் சொன்னதாவது: ஜனத்தொகை அதிகமாகிவிட்டதனால் அதிக பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் வாசிக்கின்றனரே ஒழிய, கல்வி அபிவிருத்தி ஏற்படவில்லை. பள்ளிக்கூடத்தை நடத்தும் மானேஜ்மெண்டார் பலவிதமாக உள்ளார். கட்டாயமாகவும் இலவசமாகவும் கல்வி அளிக்க அரசாங்கத்தார் ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு கல்விதிட்டத்தை அமைத்துக்கொண்டு அதை நடைமுறையில் கொண்டு வர அரசாங்கத்தார் பணத்தை அளித்தால்தான் பொதுஜனக் கல்வி அபிவிருத்தியடையும்.

ஸ்ரீமான் K. S. செங்கல்ராயன் ஸ்தலஸ்தாபனங்களால் நடத்படும் பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களின் குறைகளைப் பற்றிப் பேசினார் இந்த வகுப்பு ஆசிரியர்களின் நிலைமை ஜில்லாவுக்கு ஜில்லா வேறுபடுகின்றது. சம்பள திட்டம், ஒன்று உண்டு என்றாலும், ஆளுக்குத் தகுந்த விதம் சம்பளமும், பிரமோஷனும் கொடுக்கப்படுகின்றன. சுற்றறிக்கைகளுக்குப் பதில் எழுதுவதிலேயே ஆசிரியர் காலம் கழிந்து விடுகிறது. அனாவசியமாக ஆசிரியர்களுக்குத் தண்டனை ஏற்படுகின்றது. பையன்கள் பள்ளிக்கூடம் வராவிட்டாலும், வகுப்பில் பிள்ளைகள் குறைந்தாலும், ஆசிரியருக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. இவைகளினால் ஒழுங்காக நடக்க வேண்டிய பள்ளிக்கூடங்களில் ஒழுங்கு தவறிக்காரியங்கள் கெட்டுப்போகின்றன. வருஷக்கடைசியில் கிராண்டு வரும் வரையில் பஞ்சாயத்து ஸ்கூல் ஆசிரியருக்குச் சம்பளமே கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட பல குறைபாடுகளை அதிகாரிகளுக்குத் தெரிவித்து நிலைமையை சீர்படுத்தவேண்டியது அவசியம் என்று கூறினார்.

ஸ்ரீ. M. G. வெங்கடராமன் உதவிபெற்று நடத்தும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் நிலைமையைப்பற்றிச் சொன்னார். ஸ்ரீமான் வெல்லூர் S ஸ்ரீனிவாச அய்யர் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் படதிட்டங்களைப்பற்றிப் பேசினார். Rev. G. P. ஜேம்ஸ், (பசுமலை, மதுரை) அவர்கள் முதியோர் கல்வியைப் பற்றி பேசினார்.

RESOLUTIONS PASSED AT THE CONFERENCE

1. *Educational policy.*—This Conference appeals to the public to urge upon the Government the necessity for the immediate reconsideration of its policy in regard to the management of Elementary and Secondary Schools and for the formulation of a new educational policy suited to the modern requirement of education in the Presidency.

2. *Provincial Advisory Board of Education.*—This Conference requests the Government to create a Provincial Advisory Board of Education consisting of the representatives of the Government, the Universities, the managements and the South India Teachers' Union to advise on matters educational and professional.

3. *Provident Fund.*—(*a*) This Conference requests the Provincial Government to increase the rate of contribution by the Government from 1/3 to 1/2 of the amount to the credit of the subscriber at the time of closure of his account.

(*b*) This Conference requests the Government to permit teachers in aided schools to pay insurance premia from out of their Provident Fund Deposits.

4. *Grant-in-Aid.*—This Conference presses upon the Government the necessity for the revision of the Grant-in-Aid Code so as to improve the equipment and conditions of service in schools and also to ensure security of tenure of teachers.

5. *Free and Compulsory Education.*—This Conference reiterates that the amended Madras Elementary Education Act of 1937 be further amended with a view to introducing universal, free and compulsory education.

6. *Adult Education.*—This Conference requests the Government to provide adequate facilities for the education of the illiterate adults and appeals to the University authorities, the educated public and to the District Guilds to start organisations for the removal of adult illiteracy.

7. (*a*) This Conference with views alarm the tendency of certain Local Bodies to effect economy in education expenditure (*i*) by the removal of personal allowance granted to teachers affected by G.O. No. 4619 (*ii*) by the imposition of cuts in salaries (*iii*) by the closure of sections in schools and (*iv*) by the retrenchment of staff and it urges the Government to review the policy behind such action and to take measures to safeguard the interests of teachers and the educational needs of the locality.

(*b*) This Conference strongly disapproves of the action of Local Bodies in ignoring the claims of seniority in the matter of confirmation and promotion and the claims of service in the matter of retrenchment of teachers and the merging of increments earned in the scales of salaries.

8. *Elementary Education* (*Amending*) *Bill, 1941* :—This Conference is of opinion that the proposed amendment of the Madras Elementary Education Act, 1920, is bound to affect and retard the progress of Elementary Education in the presidency by repealing the Statutory guarantee of a contribution (not less than the amount raised by a local body by the levy of an education cess) in the case of local bodies which may hereafter resolve to levy an education cess.

The uncertainty in the amount of aid which may be expected from the Government will make them disinclined to levy an education cess, the proceeds of which cannot possibly be sufficient to enable them to undertake the development of elementary education with their own resources.

This Conference strongly disapproves of the proposed amendment to Section 37 of the Act.

செய்தித் திரட்டு

சுகவாரக் கொண்டாட்டம் 82. தண்டலம்
(ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா)

8—5—41 மாலை 5 மணிக்கு ஷை தண்டலம் போர்டு பாடசாலைப் பிள்ளைகளும், ஆசிரியர்களும், கிராமத்தார்களில் பலரும் வாத்திய கோஷத்துடன் ஊர்வலம் வந்ததும், பூனமல்லிஹெல்த்யூனிட், ஹெல்த் இன்ஸ்பெக்டர் திரு. சுவேதாரண்யம் ஐயர் அவர்கள் தலைமையில் ஷை கொண்டாட்டம் நடைபெற்றது.

அவ்வமயம், பல்லாவரம் போர்டு பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. P. T. ஜெகன்னாத ஐயங்கார் அவர்களால் "கல்வியும், பெற்றோர் கடமையும்" என்கிற விஷயமும், ஆனகாபுத்தூர் போர்டு பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. J. சாமராவ் அவர்களால், "சுகாதார விதிகளும், கிராமவாசிகளில் ஒழுக்கமும்" என்கிற விஷயமும், கோவூர் போர்டு பாடசாலை உதவி ஆசிரியர் திரு. K. G. இராமசந்திரன் அவர்களால், "தொத்து வியாதிகளும், அவற்றைத் தடுக்கும் முறைகளும் என்கிற விஷயமும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு," தலைவர் முடிவுரைக்குப்பின் திரு. V. தேப்பெருமாள் பிள்ளை அவர்களால், வந்தனோபசாரம் கூறப்பட்டு அனைவர்களுக்கும் திண்பண்டங்கள் வழங்கப்பட்டு இரவு 8 மணிக்குக்கூட்டம் இனிது கலைந்தது.

T. இராமசாமி முதலியார்
தலைமை ஆசிரியர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண எலிமென்டரி ஸ்கூல், சிவகங்கை

சென்ற ஏப்ரல்மீ 20வ ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு ஷை ஸ்கூலில் வருஷாந்திரக் கொண்டாட்டம் விமரிசையாக நடைபெற்றது. அவ்வமயம் சிவகங்கை ரேஞ்சு சீனியர் டிபுடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ V. கிருஷ்ண ஐயங்கார் B.A., L.T., தலைமை வகித்தார்.

ஸ்ரீ S. குப்புசாமி அய்யர், ராஜாஸ் ஹைஸ்கூல் ஆசிரியர் "வீடும் குழந்தையின் கல்வியும்", என்பதைப்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர்.

திருவண்ணாமலை தாலுக்கா, கத்தாழம்பட்டு கிராமப்பஞ்சாயத்து போர்டு பாடசாலை ஆண்டுவிழா.

1941-ம் வூ மேமீ 12வ திங்கட்கிழமையன்று ஷை பாடசாலையின் 16-வது ஆண்டு விழா வடாற்காடு ஜில்லா உதவிப் பஞ்சாயத்து ஆபீஸர் ஸ்ரீ N. லோகநாதன் B.Sc., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஆண்டு விழா ஷை தேதி 2-30 மணிக்கு ஆரம்பமாகி, மாணவ மாணவிகளால் சம்பாஷணைகள், சங்கீதம் முதலியவைகள் நடத்தப் பட்டன,

ஸ்ரீ நாராயண ரெட்டியாரால்; "கல்வியும் பஞ்சாயத்து போர்டுகளின் பொறுப்பும்" என்பதுபற்றி நீண்டதோர் பிரசங்கம் செய்யப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப் பின், ஸ்ரீ V. C. காளியப்பன் அவர்களால் வந்தனோபசாரங்கூறப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது. பின்பு இரவு 9-30 மணிக்கு ஷை ஆபீஸர் தலைமையின் கீழ் "வள்ளித் திருமணம்" என்னும் நாடகத்தை மாணவ மாணவிகளால் நடித்துக்காட் டப் பட்டது.

திருக்கோயிலூர் தாலுக்கா போர்டு பாடசாலை ஆரம்ப ஆசியர் களின் யூனியன் வருடாந்திரக் கொண்டாட்டம்.

11—5—41 மாலை 3 மணிக்குத் திருக்கோயிலூர் போர்டு ஹைஸ்கூலில் தென்னாற்காடு ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீ K. சீதா ராம ரெட்டியார் B.A., B.L., M.L.A (Central) அவர்களின் தலைமை யின் கீழ் துவக்கப்பட்டது'

ஸ்ரீ சுத்தரேசய்யர் அவர்களால் இறைதுதி பாடபட்ட பின்னர் அக்ராசனருக்கு யூனியன் அங்கத்தினர்களின் சார்பாக காரியதரிசி ஸ்ரீ R. குப்புசாமி தீக்ஷிதரால் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப் பட்டது. காரியதரிசியால் யூனியனின் 1940-41 ஆண்டு அறிக்கை வாசிக் கப்பட்டது.

அக்ராசனர் தன் முன்னுரையில் 2500 ஆசிரியர்களை உடைய சுமார் 900 போர்டு எலிமெண்டரிப் பாடசாலைகளை ஜில்லா போர்டால் நிர்வகிப்பது சிரமமான காரியமென்றும், ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் களின் மாற்றலுக்கு அவர்களே காரணமென்றும், தற்போது ருபாய்க்கு ஒரு அணு வீதம் ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய் திருப்பது ஜில்லா போர்டின் செல்வநிலை சரியாயில்லாத காரணத்தால் தானென்றும் குறிப்பிட்டார்.

பின்னர் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைக்காக Allowance கொடுக்க வேண்டுமென்றும், ஆசிரியர்களைச் சொந்த தாலூக்காவிலேயே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், காஷுயல்லீவ் விண்ணப்பங்கள் ரிப்ளை கார்டில்லாமல் முன் யிருந்தபடி Form களில் இருப்பது நலமென் றும், ஒரே பாடசாலையில் வேலை செய்துவரும் ஹெட்மாஸ்டரை அதே பாடசாலையில் உதவி ஆசிரியராகப் போடாதிருக்குமாறும், ரூபாய்க்கு ஒரு அணு வீதம் பிடித்தம் செய்யத் தீர்மானித்திருப்பதை ரத்து செய்ய வேண்டிக் கொள்வதென்றும், 220 வேலைநாட்களை 200 ஆகக் குறைக்க வேண்டுமென்றும், அரசாங்கத்தார் லோகல் போர்டுகளுக்கு சமதொகை Contribution கொடுப்பதை நிறுத்துவது சம்பந்தமான உத்தேசத்

தைக் கைவிடும்படி வேண்டிக் கொள்வதென்றும், சம்பளப் பிடித்தம் (i.e. ரூபாய்க்கு 1 அணு வீதம்) செய்ய உத்தேசித்திருப்பதை நிறுத்தி ஒரு சிலர் வாங்கும் Personal allowance ஐ நிறுத்தி நஷ்டத்தை ஈடு செய்து சொள்ளும்படிக்கும் போர்டாரை வேண்டிக்கொள்ளவும் தீர் மானங்கள் பாஸ் செய்யப்பட்டன.

Sri. V. G. ராமச்சந்திரய்யர் (திருக்கோயிலூர் அட்வகேட்) அவர்கள் பின்பு "ஆரம்ப ஆசிரியர்களின் தற்காலநிலைமை" என்பதைப் பற்றிப் பேசுகையில் ஆசிரியர்கள் தாங்களே முயற்சிசெய்து தங்கள் தொழிலின் முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலா மென்று குறிப்பிட்டார்.

பின்னர் பெண்பாடசாலைக் குழந்தைகளால் வெகு அழகாக பரத நாட்டியம், கும்மி, கோலாட்டம் முதலிய நடத்திய பிறகு அக்ராச னர் தம் பின்னுரையில் ஆசிரியர்களுக்கு கூடிய வரையில் தான் சௌகரி யம் செய்வதாகத் தெரிவித்தார்.

காரியதரிசியால் அக்ராசனர், உபந்நியாசகர் முதலியோர்களுக்கு வந்தனோபசார மளிக்கப்பட்டு சங்கீதக் கச்சேரி தேசவாழ்த்துடன் கூட்டம் கலைந்தது.

பெற்றோர் சங்க ஆண்டுவிழா உமர் ஆபாத் (வட ஆற்காடு)

இவ்வூர் முஹம்மதியா உயர்தர ஆரம்பபாடசாலையின் பெற்றோர் சங்க ஆண்டு விழா 16—5—41-ல் மாலை 3 மணிக்கு ஆலி ஜனுப் சையத் நியாமதுல்லா சாஹிப் (வேலூர் முஹம்மதிய ரேன்ஜ் டிப்டி இன்ஸ்பெக் டர்) தலைமையின் கீழ் நடைபெற்றது.

தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் P. C. ஸ்ரீனிவாசன் B.A. (Hons) L,T., பெற்றோர்களை வரவேற்று வருஷாந்திர அறிக்கையைப் படித்தார். பெற்றோர்களின் கடமை என்பதைப்பற்றி தலைவர் விரிவாகப் பேசி பெற்றோர்கள் தங்கள் பெண்பிள்ளைகளையும் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவேண்டுமென்று வற்புறுத்திக் கூறினர்.

பின் 8-ம் வகுப்பிற்கு இன்ஸபெக்டரிட பரீக்ஷையில் தேறிய மாணவர்களுக்கு மானேஜர் ஆலிஜனுப் சௌகார் காகா. முஹம்மத் இஸ்மாயில் சாயபு அவர்களால் சர்டிபிகேட்டுகள் வழங்கப்பட்டன.

முடிவில் இவ்வூர் அரபிக் காலேஜ் பிரின்ஸிபால் அல்ஹாஜ் முஹம் மத் பஜ்லுல்லா சாஹெப் அவர்கள் வந்தனோபசாரம் கூறிய பின் தேநீர் விருந்து அளிக்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

திருமலைராயபுரம்

மதுரை ஜில்லா திண்டுக்கல் தாலுக்கா திருமலைராயபுரம் போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை மாணவர் சங்க ஆண்டு விழா 25-4-41 தேதி திண்டுக்கல் ரேஞ்சு டெப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. மகாலிங்கம் பிள்ளை அவர்கள் B.A.,L.T., தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பத்திராதிபர் குறிப்புகள்

மாகாணக் கல்வி மகாநாடு.

தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தார் ஆண்டுதோறும் ஆசிரியர்களை ஒன்றுகூட்டி, கல்வி அபிவிருத்திக்கான வழிகளைப்பற்றி யோசித்துத் தமது அபிப்பிராயங்களை அரசாங்கத்தாருக்குத் தெரிவிப்பது வழக்கம் என்பதை ஆரம்ப ஆசிரியர்கள் அறிவார்கள். இவ்வருஷம், மே மாதம் 15உ மதனபள்ளிக்கருகில் உள்ள ரிஷிவனத்தில் இம் மாகாணத்து ஆசிரியர்கள் மகாநாடு கூட்டி முக்கியமான விஷயங்களைப் பற்றி விவாதம் செய்து, பல தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கின்றனர். தீர்மானங்களில் பல ஆரம்பக் கல்வியைப் பற்றியவை. இம்மாகாணத்தில் இலவசக் கட்டாயக் கல்வியை நடைமுறையில் கொண்டுவரவும், முதியோர் கல்வியில் ஊக்கம் செலுத்தி நாட்டிலுள்ள அனைவருக்கும் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கவும் வேண்டிய வழிகளைப்பற்றி நீண்ட விவாதங்கள் நடந்தன. ஆரம்ப ஆசிரியர்களுடைய சம்பள திட்டம், தொழில் சௌகரியங்கள், முதலிய விஷயங்களும் விவாதத்திற்கு வந்தன. இவைகளைப்பற்றி மகாநாடு நிறைவேற்றிய தீர்மானங்களை மற்றோரிடத்தில் காணலாம்.

இவைகளிலிருந்து தென்னிந்திய ஆசிரியர் சங்கம் ஆரம்பக் கல்வியிலும், அதை அபிவிருத்திக்காக உழைக்கும் ஆரம்ப ஆசிரியர் நிலைமையிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டு வேலை செய்கின்றது என்பதை ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியரும் கவனிக்கவேண்டியது அவசியம். ஒற்றுமையினால்தான் இக்காலத்தில் ஆசிரியர்கள் தமது நிலைமையை உயர்த்திக் கொள்ளலாகும். கல்வி அபிவிருத்திக்காக அரசாங்கத்தார் பெரும்பொருள் செலவு செய்யலாம். ஆனால் கல்வி திட்டத்தைப்பற்றியும், போதனாமுறைகளைப் பற்றியும் ஆசிரியர்களுடைய அபிப்பிராயங்களை அரசாங்கத்தார் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டி ஏற்படுகிறது. இவ்விஷயங்களைப்பற்றி ஓர் முகமாக யோசனைகூற ஆசிரியர்கள் அனைவரும் சேர்ந்து தமது சங்கத்தின் வழியாக வேலைசெய்வது தான் சிறந்த முறையாகும். மேலும் ஆசிரியர்கள் தமக்குள்ள குறைகளையும் நீக்கிக்கொள்ள இது தான் சிறந்த வழி.

ஆரம்ப ஆசிரியர்கள் 'சங்கம் செய்வது தங்கம் செய்யாது' என்ற உண்மையை அறிவார்கள். அவர்கள் ஆங்காங்கு யூனியன்கள்

ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். அவைகளை தென்னிந்திய ஆசிரியர் சங்கத்துடன் இணைத்துக்கொண்டு, எல்லா ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து கல்வி அபிவிருத்திக்காகவும், ஆசிரியர் நன்மைக்காகவும் வேலை செய்ய முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

பெண்கல்வி அபிவிருத்தி யடைவதற்கா?

பெண் பிள்ளைகளுக்கு தனிப் பள்ளிக்கூடம் இல்லாத இடங்களில் ஆண்பிள்ளைகள் பள்ளிக்கூடம் இருந்தால், அவைகளில் குறைந்த பக்ஷம் நான்கில் ஒரு பாகம் பெண்கள் படிக்கவேண்டும்; இல்லாவிட்டால் அப் பள்ளிக்கூடங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் 'ரெகக்னிஷன்' எடுத்து விடப்படும் என்ற அறிக்கை கல்வி இலாகா அதிகாரியால் சில மாதங் களுக்கு முன் வெளியிடப்பட்டதாக தெரிகிறது.

பெண்கல்வியின் அபிவிருத்தி தான் இவ்வித அறிக்கையின் நோக் கம் என்று நன்கு புலப்படுகிறது. பெண் கல்வியின் அவசியத்தைப்பற்றி அறியாதார் யார் உளர்? பெண் கல்வி அதிகமாக அதிகமாக, ஆரம்பக் கல்வி அபிவிருத்தியாகும் என்பதில் சந்தேகமில்லை. படித்த ஸ்திரீ தன் பிள்ளைகளும் பெண்களும் படிக்க வேண்டும் என்று ஆசை கொள்ளுவாள் என்பது உண்மையே. ஆகையால் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு சிறு வர்கள் அதிகமாக வருவார்கள் என்பதும் உண்மை. பெண்கள் படித் தால் சமூகத்தில்பல நன்மைகள் உண்டாகும் என்பதும் உண்மை. ஆனால் பெண் கல்வி அபிவிருத்தியடைய இந்த அறிக்கை எள்ளள வேனும் உதவி செய்யாது என்று உறுதியாகக் கூறலாம்.

ஏனென்றால் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண் டும் என்று அரசாங்கத்தார் கட்டாயப் படுத்தவில்லை. படிப்பு இலவச மாக அளிக்கப்படுகிறது என்றும் சொல்லமுடியாது. இப்படி இருக்கும் போது, மானேஜ்மெண்டார் முயற்சியின் பேரில் பெண்பிள்ளைகளின் தொகையை அதிகப்படுத்த எண்ணுவது அவ்வளவு சுலபமான காரிய மல்ல.

கல்வி இலாகா அதிகாரிகள் உடனே இந்தப் புது முறையை அமு லுக்குக் கொண்டுவர மாட்டார்கள் என்று நம்புகிறோம். அப்படி அமு லுக்குக் கொண்டுவந்தால் பல பள்ளிக்கூட மானேஜர்களுக்கு நஷ்டம் உண்டாவது நிச்சயம். இந்த அறிக்கையினால் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களைப்பற்றி தீர யோசித்து பெண்கல்வி அபிவிருத்திக்கு வேண் டிய முறைகளை கல்வி இலாகா அதிகாரி கையாளுவார்கள் என்று எதிர் பார்க்கின்றோம்.